www.tamilarangam.net

# TAMOUL MURASU

MURASU-5 MARS 1987 OLI-5



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# EDITORIAL

## *A PROPOS DE LA RENCONTRE DU GOUVERNEMENT SRILANKAIS ET LE MOUVEMENT TIGRES DE SRILANKA*




*Dans les jours à venir une rencontre qui aura lieu entre le gouvernement Srilankais et le mouvement "TIGRES" de Srilanka.*

*Du côté des Tamouls, le souhait est exprimé pour que les TIGRES ne répondent pas aux appels du gouvernement Srilankais, car depuis toujours les membres des TIGRES sont considérés comme terroristes.*

*Répondre aux appels du gouvernement signifie signer la soumission audit gouvernement. Vous devez combattre et pas soumettre.*

*Pensez aux Tamouls vos compatriotes qui souffrent comme vous sous le joug du gouvernement Singalais. Alors fait un pas en arrière pour mieux sauter!*

*Pensez qu'après l'indépendance de l'Eelam, il n'y a pas que pouvoir militaire, ou législatif ou encore l'exécutif.*

*Tous les trois pouvoirs sont reunis ensemble, séparement mais ils collaborent au service de l'Etat d'Eelam.*

*Pensez y que l'état se compose d'une population c'est les TIGRES et autres mouvements mais tous ensemble ce sont des peuple d'Eelam, le territoire c'est l'Eelam, et enfin une cohesion politique subsiste entre cette population.*

*Pour que vivre l'Eelam, ne repondre pas aux appels du gouvernement Srilankais.*

www.tamilarangam.net



## LES TRAVAILLEURS DE PLANTATIONS FONT LA GREVE EN SIGNE DE PROTESTATION CONTRE L'ATTAQUE DE L'ARMEE

500 travailleurs tamouls des plantations de Nuwareliya Elephant Valakaparai faisaient la grève le 23.02.1987. Cette grève a pour origine une protestation lancée contre l'attaque des soldats contre deux travailleurs de plantations d'état pendant qu'ils cherchaient du bois pour le feu dans les forêts. Cette attaque contre des travailleurs de plantations était fait par les armées liées à Nuralai Sud-Radio Station.

## LE JOUR DE L'INDEPENDANCE DE SRILANKA ETAIT ACCUEUILLI COMME UN DEUIL

Le 39 ème année, le jour de l'indépendance de Srilanka qui a eu lieu le 4 février 1987, les peuples du Nord et de l'Est ont fêté ce jour comme un jour de deuil. Ce jour même dans le Nord, les boutiques étaient fermées et les drapeaux noirs ont été hisés. Une manifestation a été aussi organisée à Jaffna par le Front des mères.

POUR TOUTES LES CORRESPONDECES:

L'EDITEUR,

TAMOUL MURASU,

CENTRE D'INFORMATION DU PEUPLE D'EELAM

10, RUE DES MARTYRS,

75009 , PARIS, FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## LE GOUVERNEMENT CONSTRUIT UNE NOUVELLE PISTE D'ATTERISAGE POUR LES AVIONS MILITAIRES A MULAITIVU

Le gouvernement Srilankais est entrain de construire une nouvelle piste d'atterisage pour les avions militaires à Mulaitivu près d'un camp militaire.

Depuis le gouvernement a construit des semblables pistes d'atterisage dans les districts de Jaffna, Vavuniya, Batticoloa, Trincomalee et Amparai. Avec cette nouvelle piste d'atterisage à Mulaitivu, les six districts ont de la facilité d'atterir pour les avions militaires plus la septième du Mulaitivu dans le Nord et L'Est. Il est attendu que le gouvernement construira une nouvelle piste d'atterisage à Mannar près de Thallady, un camp militaire, le seul district dans le territoire Tamoul qui n'a pas d'une piste d'atterisage des avions militaires.

## 50 000 TRAVAILLEURS ONT MANIFESTE DANS LE PROVINCE D'UVA

Le Samedi, 28.02.1987, 50 000 travailleurs de plantations de 50 états dans le province d'UVA ont manifesté. La cause de cette manifestation c'est de la reduction du temps de travail dans les plantations, soit de six à cinq jours par semaine. Il est à noter que le salairr des travailleurs dépend du nombre de jours. En réduisant le nombre de jour, c'est à dire pour les travailleurs une réduction de 15% de leur gain, selon ce nouveau règlement.

**TAMOUL MURASU**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## LE PRESIDENT DE LA REPUBLIQUE DE L'INDE DESAPPROUVE L'ACTION MILITAIRE DU GOUVERNEMENT SRILANKAIS

Le président de la République Indien, Mr. Jail Singh desapprouve les actions militaires du gouvernement Srilankais contre les Tamouls pendant son discours durant l'ouverture de la session parlementaire du parlement Indien de 1987. Aussi, il exprime ses inquiétudes concernant l'accord du 19 décembre dont il s'agit de la question nationale portant sur la question des Tamouls.

A la fois, le premier ministre Indien a bien défini la position du gouvernement Indien au sein du parlement Indien, qui a eu lieu le 23.02.'87, qu'il faisait savoir que le gouvernement Indien ne se met pas comme médiateur dans le conflit Tamoul, au service du gouvernement Srilankais, tant que celui-ci n'arrêt pas ses actions militaires contre les Tamouls.

## 36 HEURES COUVRE-FEU DANS LES TROIS DISTRICTS ADMINISTRATIFS

Le gouvernement Srilankais imposait 36 heures couvre-feu dans les trois districts administratifs de Mannar, Mulaitivu et Kilinochchi, depuis 18.00 hr du 11.02.1987.

Pendant ces heures, 2000 soldats surveillaient les villages. Des jeunes gens Tamouls faisaient objet d'arrestation. Pendant une opération dite de recherche, 50 tamouls sont peris sous les balles de l'armée Srilankaise.

**TAMOUL MURASU**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## LE TULF ORGANISAIT UNE GREVE DE FAIM

Front Uni de Libération Tamoule (TULF) a organisé une grève de la faim à Madras, Inde en signe de protestation contre les actions militaires du gouvernement Srilankais contre les Tamouls. Une demande a été formée pour que le gouvernement Indien prend une décision rigide et possible concernant la solution du problème Tamoul.

Dans cette grève de la faim ont aussi participé les mouvements de libération à savoir l'EPRLF, l'ERROS, le TELO et le PLOT.

## LE GOUVERNEMENT SRILANKAIS RENFORCE LA GARDE AUX AMBASSADES DES PAYS AIDANT SRILANKA

Le gouvernement Srilankais, sans cesse fait courir le rumeur, disant que les ambassades des pays aidant le Srilanka seront attaqués par le groupe militant Tamoul d'où le renforcement de la garde aux bâtiments d'ambassade des Etats Unis, de Grande Brétagne, de Pakistan et de la Chine.

Agisant ainsi, le gouvernement serait supporté par ces pays et puis de l'aide militaire peut lui être accordée par ces mêmes pays.

*Les tamouls dans les zônes cotières du Nord et dans le département de Vavuniya, ont du faire face aux nombreux problèmes à cause de la proclamation des zônes interdites par le gouvernement Srilankais.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# FREQUENCE ALIZES

5, rue CAPLAT
75018 PARIS


105,25 MHz

Tél: 42 55 75 79
42 55 45 10

Notre fréquence organise des spectacles pluriculturels, afin de préserver un sens réel à la culture vivante et populaire, et vous propose de participer au capital économique et politique de la dernière Radio Libre parisienne; elle met en vente des titres d'une valeur de 200 Francs (par correspondance ou au studio).

JEUDI et VENDREDI 18h-20h: DROIT d'ARTISTE.

SAMEDI 18h-19h30: RECRE ALIZES.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## Le monde et moi

J'ai vu des yeux
Qui brillaient dans les ténébres.
Je me suis dis
Que le monde était beau.

Il faisait noir,
Très noir,
Mais, les yeux
Que j'avais vu
Brillaient toujours dans le noir.

La nuit
N'avait pas fermé ses yeux.
La nuit
Ne m'avait pas menti.
Alors, j'ai dit
Que le monde était beau.
Mais,
J'ai réalisé
Que la nuit
Me cachait quelquechose.

Subitement
Une lumière
Qui vole la nuit.
J'ai trouvé
Un ventre vide
Sur la terre.
Alors j'ai dit
Que le monde est terrible.

-MOGAN-

PUBLIE PAR
CENTRE D'INFORMATION DU PEUPLE D'EELAM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புழுதி விளையாட்டில் ஈழம் மலருது

சிறுகதை ——— தரன்

குகன் தன்னுடைய கோஷ்டிக்கான ஆள் சேர்ப்பில் ஈடுபட்டான்.

" ரூபன் நீ என் பக்கம் வாடா" என்று அழைத்தான். சபேசனோ? சுதா என் பக்கம் வாடா என அழைத்தான் ஒவ்வொருவரும் தமக்கு பிடித்த ஒவ்வொருவரையும் தமது பக்கத்தில் சேர்க்கும் சண்டையை செல்லமாக நடத்தி முடித்தனர்

குகன் அக்குழுவின் தலைவன். அவன் தமது தோழர்களுக்கு "இப்பகுதிக்கு இராணுவம் வர இருக்கிறதாம் அதனால் இன்று காலையே நாம் அவர்களை சுடுவோம்" என்றான்

" யாரும் பயப்படக் கூடாது,
தைரியமாய் சண்டை போடணும்"

குகனின் தங்கச்சி சுபா, அம்மாவின் சாறியை கை இடுக்குக்குள் வைத்துக் கொண்டு பெருவிரலை சூப்பிக் கொண்டு அவர்கள் கூடியிருந்த இடத்தில் இடத்தில் தறித்துவிழுத்தியிருந்த தென்னை மரத்தில் உட்கார்ந்தாள். அவள் தாயார் வயல் வேலைகளுக்காகவும், கடைக்கண்ணிக்கும் சென்று வருவதால் சிறு குழந்தையான அவளுக்கு தாய் கட்டிய அந்தச் சேலையை தன்னோடு அணைத்துவைத்திருப்பதில் அவளுக்கு தாயே அருகிலிருப்பது போல் ஓர் உணர்வு.

விளையாட்டில் ஈடுபட்டிருந்த அவளின் தமையன் குகன் தனது தங்கச்சியைப் பார்த்து சுபா வீட்ட போயிருங்க" என்றான். அவள் சிணுங்கிக் கொண்டு சிறிது தள்ளி உட்கார்ந்தாள். " வாடா குகன் அவள் இருக்கட்டும்" எனத் தோழர்கள் சத்தம் வைத்தனர்.

மாலை ஐந்து மணியிருக்கும் நாவாந்துறை இராணுவ முகாமிலிருந்து பேரிரைச்சலோடு பறந்து வந்த கெலிகொப்ரர் கைதடி வயல் வெளியில் தாழப்பறந்து சுட்டுச் சென்றது. அதை மரங்களோடு ஒன்றி நின்று வேடிக்கை பார்த்துவிட்டு விளையாட்டில்ஈடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படலாளர்கள்

குகன் குழுவினர் தமக்குரிய ஆயுதங்களை சேகரிப்பதற்காக வேலிகளிலிருந்து தடிகளை வெட்டி எடுப்பதில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். அதேபோல சபேசன் குழுவினரும் சிங்கள இராணுவமாக இயங்குவதற்கான ஆயுதங்களை அவர்களும் மேற்கொண்டிருக்கின்றனர்.

தாம் இயக்கத்தினரைப் போலவே குகனும் குகன் குழுவிலிருந்த சிறுசுகளும் இயங்குகின்றன.

அன்று காலை ஏகோ ஒரு இயக்கத்தினரால் பிரசுரிக்கப்பட்ட பிரசுரமொன்றை வழியில் இராணுவத்தினரின் சோதனைகளுக்கோ அல்லது சிலவேளை ஆசிரியரின் பயமுறுத்தலுக்கோ பயந்து கசக்கி படித்து காற்சட்டைப் பையுள் வைத்திருந்த பிரசுரத்தை மெல்ல எடுத்து ஒருவரையொருவர் ரகசியமாக அதில் பொறித்திருந்த படங்களையும் கொட்டை எழுத்துக்களான பகுதிகளையும் திரும்ப திரும்ப வாசிக்கின்றனர்.

பாடசாலையை விட்டு இராணுவ வாகனங்களுக்குப் பயந்து விரைவாக பிரதான வீதிகளைக் கடந்து ஒழுங்கைகளாலும் வயல்களூடாக விழுந்தும் சென்ற களைப்பையும் பாராது தாயிடம் ஓடி "அம்மா எங்கிட வீட்ட வருவேரம்மா நீலச்சேட்டு போட்ட அண்ணை செத்தும் போயிற்றாராம்."

இப்படி ஏதாவது செய்திகள் துயரத்தோடு அந்தக் குழந்தைகள் பகிர்ந்து கொள்கின்றனர்., தங்களின் வீட்டிற்கு வந்து உறவாடியவரென்றோ எந்த வகையிலோ தமது மண்ணில் ஒவ்வொரு அண்ணாக்களின் இழப்பையும் தாயாரிடம் தங்களுடைய உடன் பிறந்த ஒரு சொந்தச் சகோதரனை இழந்த துயர மேலிட்டால் அழுகின்றனர்.

சண்டையில் ஈடுபடுவதற்காக முக்கிய கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இடமென்றும் பாராது விழுந்து கிடந்து தங்களை முழுதாக மறைத்துக் கொண்டும் நிலைகளை அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

சபேசன் குழுவும் சிங்கள இராணுவத்தினரைப் போல் முரட்டுத்தனமான சுபாவத்தை உடையவர்களாக எனக்குப்பட்டனர். அவனின் கொப்பி புத்தகங்களில் கூட ஆமிறக்கை கண்ணி வெடிவைத்து தகர்ப்பதற்கான படமோ, அல்லது ஆமியை பெடியள் சுடுவதற்கான படமோ தத்ரூபமாக வரைந்திருப்பான். வாசிக்க முடியுமோ வாசிக்க முடியாதோ ஆயினும் எப்படி இருப்பினும், இயக்கத்தினரால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களை, பிரசுரங்களை தகப்பனார் வாசித்து ஒழித்து வைத்ததை தேடி எடுத்து தனது பாதுகாப்பில் வைத்திருப்பது அவனுக்கு புரியமான வேலை. சிலவேளை இவற்றைத் த தகப்பனார் தேடும் போது திருட்டு முழியோடு தந்தையார் வாசிப்பதற்கு வரத் தயாராகுமிடத்தில் போட்டு விட்டு பேசாமல் இருந்து விடுவான்.

குகன் சிறுவனாயிருந்தாலும் மிகவும் கெட்டிக்காரன் தனது ஓய்வு நேரங்களில் வயலின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இசைப்பதும் அவன் வீட்டிற்கும் அருகி லுள்ள வயலில் ஆடு மாடுகளுக்கு புல்லுப் பிடுங்கு வதிலும் ஈடுபடுவான் நன்ருகப் பாடவும் செய்வான்.

இவன் தாயிடம் " அம்மா அந்த அன்ருவைக்கு இன்றைக்கு நாங்க சாப்பாடு செய்து கொடுப்பமா" என்று கேட்டு ஏச்சுவாங்குவதில் ஒரு பிரியம் பிள்ளையை ஏசிவிட்டே னென்ரே அவனின் இயல்பான உணர்வுகள் மழுங்கடிக்க வைத்து விடுவோமென்று கருதிய அவனை தாய் அவனை செல்லமாக அணைத்தாள். "அம்மாவுக்கு கஸ்டம்தன்பமும்இந்த முறை கடைக்கணக்கு கூட கட்டேல்ல" மதில் வீட்டு ஆச்சி வட்டிக் காசு கேட்டு வந் திற்று போகு எங்களிட்ட இருக்கிற நேசமென்ரே போதுமையா என்றதும் வீட்டைப்ப பற்றியோ ஏதோ ஒரு கவலை அவன் முகத்தில் படர மெல்ல தாய்க்கு தொந்தரவு செய்தது போன்ற உணர்வில் எழுந்து செல்லுவான்.

வேலிகளுக்கும் பூவரசுகளுக்கும் தென்னைகளுக்கும் நிலை எடுத்திருந்த குகன் குழுவினர் பகைவரின் வருகையை முறியடிக்க தயாராகின்றனர். வேலிகளுக்குள் நிலையெடுத்து பகைவரின் வருகையை முறியடிக்க தயாராய் இருந்த குகன் கோஷ்டியினர் கரங்களில் கூரிய ஆயுதங்கள் அவை தடிகளால் செய்யப்பட்டிருக்கின்றன. அவை அவர்களின் திடம மான பிடியில் இருக்கின்றன. கண்கள் பாயும் புலியினை ஒத்துக்கிடக்கின்றது. காது கள் கூர்மையாக எதையோ அவதானித்துக் கொண்டிருக்கிறது. குகன் குழுவினரை ஆய த்தமாகும்படி சைகை காண்பிக்கின்ருன்.

சிங்கள இராணுவமாக வேடமுற்ற கோஷ்டி அப்பாவித் தமிழர்களை பிடித்து அடிப்ப துபோல் இயங்கிக்கொண்டு வருகின்றனர். ஆடு மாடுகளைச் சுடுகின்றனர். டுமீல், டுமீல், டுமீல் என சத்தம் வைக்கின்றனர். இடையிடையே சிங்கள வார்த்தைகளை கொஞ்சம் தமிழில் பேசுகின்றனர். அக்கணமே மறைவு எடுத்திருந்த குகன் குழு சவே சன் குழுவைச் சுட்டு வீழ்த்துகின்றது. ஒரே சத்தம் சிலர் தப்பி ஓடுகின்றனர். மாறி மாறி நடந்த சண்டையில் இரு தரப்பு இழப்புக்கள் இருக்கின்றன. இறந்து கிடந்த சிங்கள இராணுவக் கோஷ்டியை நோக்கி டேய் எங்கிட நாட்டில உனக் கென்ன வேலை நீதானே எங்கிட அன்ருவையைச் சுட்டனீ இப்படி பல இழப்பிலும் தாங்கிக் கொள்ளத் துயரின் அந்தச் சிறுசுகள் வெளிப்படுத்தின.

உண்மையாகவே அவர்கள் போரிட்டனர் எதிரியின் மீது பாய்வதும் கண நேரம் யுத்த ம் நிகழ்ந்த ஓரிடத்தில் நின்றது போல் எனக்கு இருந்தது விளையாட்டிலேயே அவர்-கள் இந்த மண்ணில் விடுதலையைப் பற்றி பேசுகிருர்கள் என்ற போது பெருமையும் அதே நேரத்தில் எம் குஞ்சுகளின் எதிர்காலம் என் கண்ணில் மின்னி மறைந்தது.

இந்தக் குழந்தைகளாக அன்று நான் இருந்த போது துப்பாக்கியோடு, ஏன் கா காக்கிச் சட்டையோடு பொலிஸ்காரரை கண்டுவிட்டால் அம்மாவின் சேலைத் தலைப் பு என்னை ஒழித்துவைக்க இழுத்து மூடி அடிவாங்கியிருப்பேன். அவர்களின் பேச்சிலும் அவர்களின் பாய்ச்சலிலும் உறுதியும், வீரமும் இயல்பாக நின்று பேசின. இவர்களின் புழுதி விளையாட்டில் என்னை ஒரு கணம் மெய்மறந்தேன்.

www.tamilarangam.net



சிங்கள இராணுவமாக நடித்த சபேசன் குழுவினர் குகன் குழுவினரால் தாக்கப்பட்டனர். முதலில் குகன் குழு இருந்த இடக்தை சபேசன் குழுவினர் காணவில்லை. இதனால் தோல்வியை தழுவி அந்த இடங்களிலேயே செத்து விழுந்தனர்.

குகன் சபேசனை விளையாட்டாக வெருட்டி அடித்தபோது அடி பலமாக நோகவே அம்மா ஆ.... அம்மா...ஆ குகன் அடிச்சுப் அ போட்டான் என்று அழுது கொண்டு தாயிடம் ஓடுகின்றான். இரவுச் சமையலுக்காக ஈடுபட்டிருந்த அவன் தாய் ஆக்கினை தாங்க முடியாது வேலை செய்தவனை புறம் சேர குகனை அதட்டி அழைக்கிறாள். அவன் கீழே ஒளித்து விட்டான். அழுது கொண்டிருக்கும் சபேசனை எத்தனை தரம் ஐயா சொன்னனான் ஆளை அள் அடிபடாதேங்கடா. அக்கா செத்தபிறகு அழுதழுது என்ர சீவனே என்னிட்ட இல்லை ஐயா நீங்க எல்லடா. எனக்கு கத்தவே அடிவயிறெல்லாம் நோகுது அழவும் ஏலாது என்னென்று தான் வளர்க்கப் போறனோ என்ன நிம்மதியாய் இருக்க விடுங்கே என்ர ராசால்லா என அவனை அணைத்து முத்தமிட்டாள்.

-தரன்-

---




ஒவ்வொரு வாரமும்
சனி, செவ்வாய் ஆகிய
இரு தினங்களிலும்
F.M 105.25 MHS
அலை வரிசைகளில்
இரவு 9.00 மணி
தொடக்கம் 10.00
மணி வரையும்
கேட்கலாம்.

www.tamilarangam.net



# என்ன செய்ய வேண்டும்

ஈழப் போராட்டத்தின் பல திசைகளிலும் ஏற்பட்டிருக்கும் தாக்கம் இன்று ஈழமக்களின் நெஞ்சங்களில் எதிர் காலம் குறித்த ஒரு ஏக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இன்று எமது போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பாதகமான நிலைகளினால் நாம் தளர்ந்துவிடக் கூடாது. இந்நிலை எமக்குஏற்பட்டதற்கான காரணங்களைக் கண்டறிவதுடன் கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும். தேவைப்பட்ட போது நடத்துவதற்கும் மற்ற வேளையில்திரையை இழுத்து மூடுவதற்கும் இது வெறும் அரசியல் நாடகமல்ல. ஒரு தேசிய இனத்தின் உரிமைக்கான போராட்டம். ஒரு தேச, மக்களின் உயிருக்கான போராட்டம். இன்று பிழையான சக்திகளின் கையில் போராட்டம் சிக்கி திக்கு திசை தெரியா-மல் திசை மாறுகிறது என்ற காரணத்தினால் நாம் இந்த ஊன-கால இழப்புக்களையும், துயரங்களையும் விளக்கி விட்டுவிடக் கூடாது. இந்த நிகழ்காலத் தளர்ச்சியை உடைத்தெறிய.... எதிர்காலத்தில் சரியான திசையில் போராட்டத்தைஎடுத்துச் செல்ல வல்ல சக்தியைப் பலப்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் ஈழ மக்களாகிய நாம் எமது அரசியல் தலைவர்களால் மட்டுமல்ல அவர்களின் வழிவந்த சில ஆயுதப் போராட்ட அமைப்புக்களாலும் தவறான பாதைகளில்வழிநடத்தப்பட்டோமென்பது இன்று நிரூபணமாயிருக்கிறது. ஈழப் - போராட்டத்தின் கடினத்தை மூடி மறைத்து வெறும் சுயவிளம்பரங்களிற்காகவும் பதவி இச்சைகளுக்காகவும் இதோ இன்று

www.tamilarangam.net



தமிழீழம்.... நாளை தமிழீழம் என்ற இவர்களின்வார்த்தை விளையாட்டுக்கள் போராட்டம் தொடர்பாக மக்களுக்கு ஒரு இலேசான கண்ணோட்டத்தைக் கொடுத்தது.

எமது எதிரி சக்திமிக்கவன் என்பதும்.... சர்வதேச பக்க பலமுள்ளவன் என்பதும் நவீன ஆயுதங்களைத் தாங்கி நம்இனிய தேசத்தை விழுங்குவதை முழு நோக்கமாகக் கொண்டவன்என் பதும் மூடிமறைக்கப்பட்டது. மாறாக சிறீலங்கா இராணுவம் என்பது வெறும் கூலிக்கு மாரடிக்கும் கூட்டம். சகல போர் முனைகளிலும் தனியே தோல்விகளையே சந்திக்கும் கூட்டம் . போராளிகளைக் கண்டவுடன் புறமுதுகு காட்டி ஓடும் கும்பல் என்றெல்லாம் பாரிய அளவில் பிரசாரம் செய்யப்பட்டது . எதிர் காலம் குறித்து வண்ண வண்ணக் கனவுகளை எமது மக்கள் கண்டனர். இன்றைய துன்பங்கள் நேற்று விளக்கப்பட- வில்லை. தேசத்தின் ஒரு பகுதியில் இராணுவம் முகாமுக்குள் இருப்பதை வைத்துக்கொண்டு விடுதலை செய்யப்பட்ட பிர- தேசம், எமது கைகளில் நிர்வாகம் என்றெல்லாம் வெற்று வேட்டுக்கள் முழங்கப்பட்டன.

எமது எதிரிகள் நெறி முறைகளை மதிக்காதவர்கள். மனிதா பிமானம் சிறிதுமே அற்ற பாசிஸ்டுக்கள். தங்களது வெற்றி ஒன்றை நோக்கமாகக் கொண்டு எந்தப் படுகொலைகளை- யும்... எந்த பாதகத்தையும் செய்யக்கூடியவர்கள் என்பது எம் மக்களுக்கு சரியாக உணர்த்தப்படவில்லை. ஆனல்,அரசு இன்று விதித்துள்ள பொருளாதாரத் தடை எம் மக்களுக்குஅர சின் அரக்கத்தனத்தை நிருபிக்கிறது. ஆனல் அரசின் அரக்கத்

www.tamilarangam.net



தனம் மாத்திரமல்ல ஆக்கிரமிப்பாளரிடமிருந்து பொருளாதாரவிடுதலையைப் பெறுவதற்கான எந்த ஆக்கபூர்வமான முயற்சிகளையும் செய்யாமல் சகல அடிப்படைத் தேவைகளுக்கும், அவர்களிடமே தங்கியிருந்து கொண்டு வெறும் கண்துடைப்பு விளையாட்டுக்களைக் காட்டிக் கொண்டு யாழ். குடாநாட்டுக்குள் ஒரு போலி ஆட்சியை நிறுவியது விடுதலையை வேண்டியல்ல எதிரிகளோடு சமரசத்துக்குப் போய் வெறும்எலும்புத் துண்டுகளைக் கவ்விக் கொள்வதற்காகவே.

இன்று இந்தக் கற்பனை இராச்சியம் கலைந்து போய்விட்டது எதிரி பல முனைகளிலும் முன்னேறிவிட்டான். எம் மக்களோ, தாளமுடியாத துன்பங்களின் எல்லையில், முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட இயக்கங்களோ ஒரு புறம் எதிரியாலும் மறுபுறம் எதிர்புரட்சியாளராலும் வதைக்கப்படும் நிலையில், போராட்டம் குறித்த விரக்தியான எண்ணங்கள்மக்கள் மனங்களிலே தோன்றுவது தவிர்க்க முடியாதது தான். ஆனால்இந்தக் கட்டத்தில் தான் ஈழப் போராட்டத்தில் நாம் எமது வெற்றிக்குக் குறுக்கே நிற்கின்ற எமது பலவீனங்கள் என்ன என்பதை நாம் ஆழமாக ஆராயவேண்டி உள்ளது. தேசியஒடுக்குமுறைக்கெதிராக எமது மக்கள் கடந்த காலங்களில்நடத்திய போராட்டங்கள் அனைத்துமே எமக்குப் பயனுள்ள அனுபவங்களை வழங்கியுள்ளது. எமது கடந்த கால இந்த அனுபவங்களை இன்றைய சிக்கலான காலகட்டத்தில் பயன்படுத்தத்தவறுவோமானால் நிட்சயம் எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

உலகின் மிகப்பிற்போக்கான கேவலமான, மனிதாபிமானமே அற்ற சிங்களப் பேரினவாத அரசோடு போராடுகின்றநாம் எமது மக்களை உருக்குப்போன்ற ஐக்கியத்தில் வளர்த்தெடுக்

www.tamilarangam.net



கத் தவறியதின் விளைவையும், தேசிய விடுதலைச் சக்திகளுக் கிடையில் ஏற்பட்ட பிளவுகளின் விளைவுகளையும் மக்களுக்கும், இச் சக்திகளுக்குமிடையிலான பாரிய இடைவெளியின் விளைவு ஆகியவற்றை இன்று எமது தேசத்தில் காண்கிறோம்இன்றுபோர் முனையில் எதிரி காணும் ஒவ்வொரு இராணுவ வெற்றியும், அரசியல் அரங்கில் . எதிரிக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வெற் றியும் உண்மையில் எதிரியின் பலத்தால் வந்ததல்ல எமது பல வீனத்தால் வந்ததே என்பதை எம் மனங்களில் குறித்துக் – கொள்வோம்.

எனவே போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் இன்றையதளர்வுற்ற நிலையை தவிர்க்க.... எமது தேச விடுதலைப் போராட் டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல நாம் எமது சமுகம் பற் றிய பூரண விளக்கத்தைப் பெற வேண்டும். எமது போராட் டத்தின் புரட்சியின் இன்றைய தன்மையை சரியாக விளக்குவ தும் அதன் அடிப்படையில் சரியான அரசியல் மார்க்கம், ெ கொள்கைகள், தந்திரோபாயங்கள் என்பவற்றை வகுப்பதும் அவற்றைச் சரியாக நடைமுறையில் கையாளக்கூடிய. அரசியல் தலைமைச் சக்தி எது என்பதை இனங்கண்டு அதை வளர்த்தெ டுப்பதும் இன்றைய அவசரத் தேவையாகும். இதன் மூலம் மாத்திரம் தான் ஈழப் பே ாராட்டத்தை வெற்றியை நோ க்கி நகர்த்த முடியும்

www.tamilarangam.net



# "மண்ணில் தெரியுது வானம்"

## ஒரு ஐரோப்பிய கலை வெளியீடு

இலக்கியத்தின் சமூகப் பயன்பாட்டை காலத்துக்குக் காலம் பட்டை தீட்டிவருதல் ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலைய பிரெஞ்சுக் கிளையின் பிரதான பணிகளில் ஒன்றாக இருந்துவருகின்றது. இந்த நடைமுறையின் இலக்கு ஈழமக்களின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டதாகும். செய்தித் தொடர்பு நிலையம் முதன் முதலாக வெளியிட்ட "நாளை விடி பொழுதில்" கவிதைத் தொகுப்பு ஈழ மக்களிடையே பெரிதும் வரவேற்கப்பட்டது. தற்போது "மண்ணில் தெரியுது வானம்" என்ற கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமான-தோழர் .நா .பத்மநாபாவின் அணிந்துரையைக் கொண்டுள்ள இக்கவிதைத் தொகுப்பு நான்கு கனதியான நெடுங்கவிதைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. பிரஸ்தாப கவிதைத் தொகுப்பின் அணிந்துரை, முன்னுரை ஆகியவற்றிலிருந்து சில முக்கியமான அம்சங்கள் வருமாறு.-

தோழர் பத்மநாபா தனது அணிந்துரையில் பின்வரும் அம்சங்களைச் சுட்டிக்காட்டுகின்றார்.

• சமுதாயத்தின் யதார்த்த நிலையைச் சித்தரிப்பதிலும் சமுதாயத்தை புரட்சியை நோக்கிவழி நடத்துவதில் கலைஞர்கள் பாரிய பங்கினைப் பெறுகிறார்கள். புரட்சியும் ஒரு கலையே ஆதலால் கலைஞர்கள் இன்றி புரட்சியில்லை. அந்த வகையில் இக் கவிதைப் படைப்பு முயற்சியின் கலைஞர்களாகிய தோழர் உமாகாந்தன், தோழர் செல்வம், தோழர் ஜோதி நவரத்தினம், தோழர் அருள் ஆகியோரும்தம் கவிதைகளால் ஈழமக்களின் புரட்சிகர விடுதலைப்

www.tamilarangam.net



போராட்டம் என்னும் பயிருக்கு, உரமிட்டிருக்கிறார்கள்.

எமது தேசத்தின் கலைஞர்கள் இதுவரை எமது தேசத்துக்கு ஜனநாயகம் என்பதையே பிரதானப்படுத்தி கலைஞர்களைப் படைக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று அதற்கும் மேலே போய் எமது தேசத்துக்கு ஜனநாயகம் என்பது மட்டுமல்ல எமது மக்களுக்கு ஜனநாயகம்- எமது மக்களுக்குள் ஜனநாயகம்- எமது மக்களுக்கிடையே ஜனநாயகம் என்பவற்றை-யும் குறித்து ஆக்கங்களை படைக்க வேண்டியேற்பட்டுள்ளது

ஈழம் என்பது வெறுமனே மண்ணுக்கான சுலோகமாகஇருந்தால் அதனுடைய விளைவு என்ன என்பதை மக்களால் இப்போது புரிந்து கொள்ள முடியும். அதனை கலைஞர்களால் புத்திஜீவிகளால் மேலும் நன்கு உய்த்துணர்ந்து கொள்ள முடியும். ஆகவே ஈழத்தின் கலைஞர்களும், புத்திஜீவிகளும் மற்றும் ஏனையோரும் 'மக்களுக்கான ஈழம்' எனன்பதை நோக்கி புரட்சிகர சக்திகளை ஒருங்கிணைந்து ஒருமுகப்படுத்துவதிலும் மக்களுக்கு விழிப்பையும் எழுச்சியையும் ஊட்டுவதிலும் பெரும் பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முதலில் ஈழம் வாட்டும் பிறகு மிச்ச விடயங்களைப் பார்த்துக் கொள்ளலாம் உன்று கூறியவர்களெல்லாம் என்ன நோக்கத்தோடு கூறினார்கள் என்பதை இப்போது எல்லோரா-லும் கண்டு கொள்ள முடிகின்றது. அந்தச் சக்தி தொடர்ந்தும் மக்களை ஏமாற்றாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியவர்களில் கலை இலக்கியப் படைப்பாளிகள் பெரும்பங்கு பெற வேண்டியவர்களாக உள்ளார்கள் என்று கருதுகிறேன்.

www.tamilarangam.net


எமது மக்களுக்கு ஜனநாயகம் எவ்வளவு அவசியம் என்பதை யும், ஜனநாயகத்தின் குரலாக கலைஞர்கள் தமது ஆற்ற லைக் காட்டவேண்டும் என்பதையும் தோழர் பத்பநாபா- வின் அறிந்துரை தெளிவாக விளக்குகின்றது.

ஈழம். சில இலக்கிய குறிப்புகள் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள முன்னுரை போர்க்கால இலக்கிய யதார்த்தினை விமர்சனக்கண்கொண்டு நோக்குகின்றது.

"ஆயுதமேந்திய தமிழ் பேசும் இளைஞர்களின் விடுதலைப் - போராட்டத்தின் பின்பே எமது கவிதா வேள்வி பலவிதமா ன பரிமாணங்களைத் தன்னகத்தே சேர்த்துக் கொண்டது"- என்பதை சுட்டிக்காட்டும் முன்னுரையிலிருந்து சில பகுதிகள்-

இதுவரை காலமும் நாம் கண்ட இலக்கியச் செழிப்பு இனி மேலும் சுதந்திரமாகத் தன்னை இனம் காட்டுமா என்றசந் தேகம் எழுகின்றது. நம்பிக்கையைத்தர ஆயுதங்களை ஏந் திய எங்கள்" சோதரர்கள்" தமது ஆயுதங்களிலேயே இன்று சொந்த நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள். அது அதனது குரூம்சம் என்று எங்கள் மரணங்களின் மீதான கவ லைகளைக் குறைத்துக் கொண்டோம். ஆனால், எமது "சோதரர்களே" மக்களையும், மாணவர்களையும், கலை ஞர்களையும், போராளிகளையும் கொல்லுபவர்களாக - மாறும் போது இதனை "எந்த குரூம்சம்" என எம்மால் மொழி பெயர்க்க முடியும்.

பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இவைகளுடனான ஈழம் வேண்டுமென்பதற்காகவே ஈழமக்களில் ஆயிரக்கணக்

www.tamilarangam.net


காரேரி தமது உயிரைத் தியாகித்திருக்கின்றார்கள். இந்தஉண்மையை மதிக்க மறுப்பவர்களை மனித குலத்தின் முழுவிரோதிகள் பட்டியலில் சேர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அரசியலில் இன்று புரட்சி எவ்வளவு தவிர்க்க முடியாததாயுள்ளதோ அதேபோல படைப்பிலும் புரட்சி தேவை. இலக்கிய அரசியல், சமூக, கலாச்சாரப் புரட்சிகளின் தளமாய்த் திகழும் ஒரு நாட்டில் வாழும் கலைஞர்கள் தாத் நேரில் காணும் வளர்ச்சிகளினை ஆழமாக அவதானிக்க வேண்டும். படைப்பிலக்கியத்தின் நவீன பரிமாணங்களின் பாதிப்புக்கயேளோடு, சமூக அவலங்களின் மீது மொத்தச் சமூகத்தினதும் பிரக்ஞையை விழவைக்கத்தக்கதான படைப்புக்கள் எமது எதிர் காலத்தின் தேவை. இதில் அனைத்துக் கலைஞர்களும் கவனம் காட்ட வேண்டும்.

இப்படிக் கூறுகின்றது பிரஸ்தாபமுன்னுரை

ஈழத்துக்கு வெளியே ஈழப்போராட்ட நடவடிக்கைகள் எவ்வளவு முனைப்புக் கொண்டிருக்கின்றது என்பதற்கு "மண்ணில் தெரியுது வானம்" ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். எமஎமக்கு இன்று விடுதலை தேவை. எமக்கு எமது நிலம் தேவை. இந்தத் தேவைகளை நிதர்சனமாக்கும் பணியில்புரட்சிகர இலக்கியக் கலைஞர்கள் குதிக்கவேண்டும்.

- செனாந்தர்.

---

EPIC தரும் ஈ.ழச் செய்திகளை தொலைபேசி மூலம் அறிய இங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசித் தொடர்பெண்...

48-74-60-43.

---

www.tamilarangam.net



# உலக நோக்கு

பிரான்சு–

## அப்துல்லாவுக்கு ஆயுட்தண்டனை

லெபனான் ஆயுதப் புரட்சிகரக் குழு (F.A.R.L) எனப்படும் அமைப்பின் தலைவர் எனக் கருதப்படும் ஜோர்ஜ் இப்ரகீம் அப்துல்லாவுக்கு பிரெஞ்சு நீதிமன்றம் ஆயுட்கால சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது. பிரான்சிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி சார்ள்ஸ்ரே, இஸ்ரேலியத் தூதரகத் உயர் அதிகாரி யகோவ் பாரிஸ்மன்ரோவ் ஆகியோரைக் கொலை செய்த குற்றச்சாட்டும் றொபட்ஹோம் எனப்படும் மற்றுமொரு அமெரிக்க தூதரக அதிகாரியை கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டுகளின் பெயரிலேயே அப்துல்லாவுக்கு ஜூரிகளில்லாமல் வழக்கை விசாரணை செய்த 7 நீதிபதிகளும் இத்தீர்ப்பை வழங்கியுள்ளனர். இவ்வழக்கு விசாரணையின் இறுதிக் கட்டத்தில் அரச தரப்பு வழக்கறிஞர் வழமைக்கு மாறாக எதிரிக்கு குறைந்தபட்சத் தண்டனை வழங்கவேண்டுமென்று நீதிபதிகளை வேண்டியிருந்தார். அரசாங்கத்தின் அநுசரணையுடன் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோள் சர்ச்சைக்குரியதாக இருந்தது. ஆனால், நீதியரசர்கள் அரசதரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டனர். அதேசமயம் அப்துல்லாவுக்கு இத்தண்டனை வழங்கப்பட்ட பின்னர் பாரிஸ் நகர் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 3000விசேட பொலிசார் பாரிசில் பாதுகாப்புச் சேவைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பிரான்சின் நுழைவு எல்லைகளில்இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

## நேரடி நடவடிக்கைக்குழு முக்கியஸ்தர்கள் கைது

ACTION DIRECTEஎனப்படும் `நேரடி நடவடிக்கைக் குழு' என்ற இடதுசாரித் தீவிர அமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் நால்வரை பிரெஞ்சுப் பொலிசார் கைது செய்துள்ளனர். ஓர்லியன் நகரிலுள்ள கைவிடப்பட்ட பண்ணை வீடொன்றில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சமீப காலங்களில் நேட்டோ அமைப்போடு தொடர்பான இராணுவ அதிகாரிகள், அணு உற்பத்தியோடு தொடர்பானவர்கள், பெரும் தொழிலதிபர்கள் போன்றவர்கள் இந்த அமைப்பினால் கொல்லப்பட்டுவந்தனர். பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள், வங்கிக் கொள்ளைகளோடும் இவ்வமைப்புச் சம்பந்தப்பட்டிருந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சுலோகத்தை உரக்கத்தொனிக்கும் இவ்வமைப்பு மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், இத்தாலி ஆகிய நாடுகளிலுள்ள இடதுசாரித்தீவிரவாத அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. கைது செய்யப்பட்ட-- நால்வரில் 34 வயதுடைய ஜீன்மார்க் ருயிலான் இவ்வமைப்பின் தலைவராகக் கருதப்படுகிறது. இவருடன் ஜோர்ஜ்சிப்ரானி என்பவரும் சமீபத்தில் றெனோ மோட்டார்உற்பத்தி நிறுவனத்தின் தலைமை இயக்குனரான பெஸ் என்பவரைச் சுட்டுக் கொன்றதாக கருதப்படும் 30 வயதுடைய நத்தலி மெனிக்கோன், 27 வயதுடைய ஜெனயல் ( /

www.tamilarangam.net



ஒ போனும் அடங்குவர். இவர்களின் கைது பிரெஞ்சுப் பொலிசாருக்கு கிட்டிய பெரும் வெற்றியாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா –

## றேகனின் முகமூடி கிழிகிறது



ஈரானுக்கான இரகசிய ஆயுத விற்பனை, நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளருக்கான அனுமதி பெறப்படாத நிதியுதவி ஆகிய றேகன் நிர்வாகத்தின் நாற்றமெடுக்கும் ஊழல்களை விசாரணை செய்த ரவர் (TOWER) ஆணைக்குழு தனது முழு அறிக்கையையும் பகிரங்கப்படுத்தி றேகனின் முகமூடியைக் கிழித்துள்ளது. இவ்வறிக்கையில் மேற்படி ஊழல்கள் றேகனுக்குத் தெரிந்தே அவரது அனுமதியின் பேரிலேயே நடத்திருப்பதும் அம்பலமாகியுள்ளது. தவறான திசையில் நாட்டை வழிநடத்திச் சென்றமை தமது வெளிநாட்டுக் கொள்கைகளை முறியடிக்கும் செயல்களில் தாமே இறங்கியமை, நிர்வாகத்தின் மீது கொண்ட அலட்சிய மனப்பான்மை, ஆணைக்குழு முன்.. முரண்பாடான சாட்சியங்களை அழித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் றேகனின் மீது சுமத்தப்பட்டுள்ளன. அதேசமயம் றேகனின் மிக நெருங்கிய சகாவும் றேகன் நிர்வாகத்தின் இரண்டாவது அதியுயர் அதிகாரம் படைத்தவருமான டொனல்ட்றேகன் இக்குழுவினால் கடுமையாக குற்றம் சாட்டப்பட்டதையடுத்து அவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியான பின் ஜனாதிபதி றேகன் மீது இமெரிக்கா மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மிகவும் பாரிய அளவில் குறைந்துள்ளதை அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் தெரிவிக்கின்றன. றேகன் நிர்வாகத்தின் கீழுள்ள எதிர்வரும் இரண்டுவருடங்களையும் அமெரிக்கா முடமான நிலையிலேயே கழிக்க வேண்டி இருக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சோவியத் யூனியன் –

## புதிய திசைவழியில் சோவியத் யூனியன்


Gorbachev

சோவியத் தலைவர் தோழர் கோர்பச்சேவின் ஆட்சியின் கீழ் சோவியத் யூனியன் புதிய திசைவழியில் உற்சாகத்துடன் காலடி எடுத்துவைத்துள்ளது இன்று சோவியத் யூனியனில் மேற்கொள்ளப்பட்டுவரும் மாற்றங்கள் முழு உலகையும் வியப்புக்கு உள்ளாக்கியதோடல்லாமல் வரவேற்கவும் செய்துள்ளன. தோழர் கோர்பச்சேவின் புதிய கோசமான 'திறந்ததன்மை' ஐ என்பதன்கீழ் பத்திரிகைகள் சுதந்திரமான விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளன. அரசின் தவறுகள், அதிகாரிகளின் ஊழல்கள் பகிரங்க விமர்சனத்துக்கு வரத்தொடங்கியுள்ளன. கலைஞர்கள், கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் கட்டுப்பாடற்ற வெளிப்பாட்டுச் சுதந்திரம் பெற்றவர்களாகிறார்கள். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சக்கரோல்போன்ற பல அறிவியலாளர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். லஞ்ச ஊழல்களில்

www.tamilarangam.net



சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் உடனுக்குடன் கைதுசெய்யப்பட்டு வருகின்றார்கள். இதை விட சோவியத் சமூகத்தில் இன்னும் பல புதிய மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றன எனக் கூறியுள்ள தோழர் கோர்பசசேவ் இந்த மாற்றங்கள் எந்த வெளிநாடுகளினது நிர்ப்பந்தத்தால் ஏற்படுத்தப்படுவன அல்ல. மாறாக சோசலிசத்தின் ஒரு படியே என்றும் இவை சோவியத் யூனியனை ஒரு புரட்சிகர நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும், கூறியுள்ளார். தோழர் கோர்பசசேவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்நடவடிக்கைகளுக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளும் மக்களும் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்சு –

பிலிப்பைன்சில் புதிய மக்கள் இராணுவத்தினர் கை ஓங்குகிறது

பிலிப்பைன்சின் விடியல் எந்த பூர்சுவா அரசியல் கட்சிகளிடமுமல்ல புதிய மக்கள்இராணுவத்தின் கையிலேயே தங்கியுள்ளது என்பதை பிலிப்பைன்சில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சம்பவங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து தனது இராணுவத்துடனான இழுபறியில் ஈடுபட்டிருக்கும் அக்கினோ அரசை விலைக்கு வாங்குவதில் அமெரிக்கா ஏகாதிபத்தியம் ஓரளவு வெற்றிபெற்றுவருகிறது. 70%க்குமேலான மக்கள்வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற நிலையைச் சீர்திருத்துவதற்கான எந்தத் திட்டமுமே அக்கினோ அரசின் கைவசம் இல்லை. அதேசமயம் போர் நிறுத்த ஒப்பந்த காலத்தைப் பயன்படுத்தி புதிய மக்கள் இராணுவம் (NPA) நாட்டின் சகல முனைகளிலும் முன்னேறியுள்ளது. NPA க்கு கிட்டியுள்ள இந்த வெற்றிகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் பொருட்டு அக்கினோ அரசாங்கம் 'கொரில்லாக்களுக்கான பொதுமன்னிப்புத் திட்டமொன்றை' அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசிடம் சரணடையும் கொரில்லாக்களுக்கு குறிப்பிட்டளவு பணம் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு எதிர்காலத் தொழில் குறித்த உத்தரவாதமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கினோ அரசின் இத்திட்டத்தை முற்றாக நிராகரித்த புதிய மக்கள் இராணுவத்தின் தலைமை இத்தகைய இலஞ்சத்தை வழங்குவதன் மூலம், புரட்சிகரமான ஒரு யுத்தத்தை முன்னெடுக்கும் போராளிகளை விலைக்கு வாங்கிவிட முடியாது என்று கூறியுள்ளது. அதேசமயம் செபு, மின்டானோ, லூசான் உட்பட நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அரசபடைக்களுக்கெதிரான புதிய மக்கள் இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அல்ஜீரியா –

பொலிசாரியோ முன்னணிக்கு தொடர்ந்து வெற்றிகள்

அமெரிக்கக் கைக்கூலியான மொரோக்கோவின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கும் மேற்கு சகாரா பிரதேசத்தின் விடுதலைக்காகப் போராடிவரும் பொலிசாரியோமுன்னணி மொரோக்கோ படைகளுக்கெதிரான தனது சமீபத்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாக்குதல்களில் பெருவெற்றிகளை அடைந்துள்ளது. மேற்படி தாக்குதல் ஒன்றில் பொலிசாரியோ முன்னணிப் போராளிகளால் 300 மொரோக்கோ துருப்புக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டனர். 213 பேர் கொல்லப்பட்டனர். 83பேர் கைதுசெய்யப்பட்டனர். இதையடுத்து நடந்த இன்னுமொரு தாக்குதலில் மொரோக்கோ படைகளின் 12மைல் நீளமான பாதுகாப்பு அரண் பொலிசாரியோ போராளிகளால் கைப்பற்றப்பட்டதுடன் 28பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மொரோக்கோ படைகளின் 5 கவச வாகனங்கள் போராளிகளால் நாசம் செய்யப்பட்டது. தமதுதேசத்தின் விடுதலையை விரைவில் வென்றெடுப்பதற்காகவே தாம் யுத்தத்தை முடுக்கியுள்ளதாக அல்ஜீரியாவிலிருந்து வெளியாகிய பொலிசாரியோ முன்னணியின் அறிக்கை தெரிவிக்கிறது.

ஸிம்பாவே —

## செயரில் அமெரிக்க தளம் அமைக்கும் திட்டம்
## SWAPO தலைவர் கண்டனம்

செயர் நாட்டில் இராணுவத் தளம் ஒன்றை அமைக்கமுயலும் அமெரிக்காவின் திட்டத்தை எனப்படும் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பின் தலைவர் சாம் நிஜோமா வன்மையாகக் கண்டித்துள்ளார். ஆபிரிக்க நாடுகளின் ஐக்கிய அமைப்புடாடாக இதில் தலையிட்டு இத்திட்டத்தை நிறுத்த வேண்டும் எனக் கோரியுள்ளஅவர் ஆபிரிக்க கண்டத்திற்குள்ளான தனது தலையீட்டுக்கே அமெரிக்கா இத்தளத்தைப் பயன்படுத்தும் என எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் இச்செயலால் எல்லைப்புற நாடுகளான அங்கோலா, பொஸ்வானா, தான்சானியா, மொஸாம்பிக், ஸிம்பாவே போன்ற குண்டு வீச்சுத்தாக்குதல்களை எந்நேரமும் எதிர் நோக்க வேண்டிய ஒரு சூழ் நிலைக்கே தள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

செய்திகள்.

*** பெல்ஜியத்திலிருந்து இங்கிலாந்து சென்ற பயணிகள் படகொன்று கடலில் மூழ்கியதில் 135 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் படகில் படகு ஊழியர்களுட்பட 543பேர் பயணம் செய்தனர்.

***

*** பாரிசின் 16வது நகரப்பிரிவில் 3லெபனன் பிரஜைகள் வெடிமருந்து, இயந்திர துப்பாக்கி மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விசேட பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

*** மத்தியதர வீச்சு ஏவுகணைகளை ஐரோப்பாவிலிருந்து அகற்றும் விடயம் தொடர்பாக சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இணக்கமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

www.tamilarangam.net



*** 'பாகிஸ்தானின் அணுகுண்டு உற்பத்தி முயற்சியே இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் சுமுகநிலை ஏற்படாமல் இருப்பதற்கான காரணம்'' என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார். அதே சமயம் எந்த ஒரு வெளிநாட்டின் வற்புறுத்தலுக்காகவும் பாகிஸ்தான் தனது அணுகுண்டு உற்பத்தி முயற்சிகளைக் கைவிடாது என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் செயின் தா ரானி தெரிவித்துள்ளார்.

*** அமெரிக்க இராணுவ இரகசியங்களை இஸ்ரேலுக்காக உளவுபார்த்த அமெரிக்க கடற்படை உயரதிகாரியான ஜொனாதன் பொலார்ட் என்பவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனையையும் அவரது மனைவிக்கு ஐந்து வருட சிறைத்தண்டனையும் அமெரிக்க நீதிமன்றம் வழங்கியுள்ளது.

*** லெபனானில் அமைதியை நிலைநாட்ட என்று கூறி சிரிய அரசினால் அனுப்பப்பட்ட 7000 சிரியத் துருப்புக்கள் பெய்ருத்தின் முக்கிய இடங்களில் நிலைகொண்டுள்ளதுடன் இங்குள்ள அனைத்து அரசியல் அமைப்புக்களையும் தடை செய்துள்ளன. பெய்ருத் வீதிகளில் எவரும் துப்பாக்கிகளுடன் நடமாடக்கூடாது என்றும் அறிவித்துள்ளன.

*** முஜாகிதீன் எனப்படும் ஆப்கானிஸ்தானின் எதிர்ப்புரட்சியாளருக்கு கடந்த ஆண்டு வழங்கியது போல இருமடங்கு ஏறத்தாழ 500 சிறியரக ஏவுகணைகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் வழங்க இருக்கிறது. இவற்றை உபயோகிப்பதற்கான பயிற்சி பாகிஸ்தானில் வைத்து அமெரிக்க இராணுவ அதிகாரிகளால் இந்த எதிர்ப்புரட்சியாளருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவற்றைப் பாவித்து இந்தக் கைக்கூலிகள் இரு பயணிகள் விமானங்களை சுட்டு வீழ்த்தினர்.

*** பேரு நாட்டில் நீண்ட காலமாக கொரில்லாப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் SHINING PATH போராளிகள் சமீப நாட்களில் அரசபடைகளுக்கெதிராக தமது பலமுனைத் தாக்குதல்களையும் உக்கிரப்படுத்தியுள்ளனர்.

செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள் செய்

EPRLF வெளியீடுகளான கண்ணோட்டம், செந்தணல், ஈழப்போராளி, 1987ம் ஆண்டுக்கான நாட்காட்டி மற்றும் 'மண்ணில் தெரியுது வானம்' கவிதைத் தொகுப்பு ஆகியவற்றைப் பெற EPIC பிரான்சுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழப்போராட்டத்தில் ஐக்கியம். சாத்தியமாகுமா..? ஆகாதா..?

ஜெசுகிர்தன்

மக்களின் பார்வையில் இன்று இயக்கங்கள் வெறுப்புக்குரியன வையாகத் தோன்றுகின்றன. இதனை வைத்துக்கொண்டுஇயக்கங்களை வெறுத்தொதுக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்து விட முடியாது. ஆனால், மக்களின் வெறுப்பில் நியாயங்களும் உண்டு. இயக்கங்களிடையே விரிவடைந்துவரும் பிரிவு மக்களுக்கு வெறுப்பினை உண்டுபண்ணுகின்றது. அதிகரித்து வரும் — கொலைகள் மக்களுக்கு அதைரியத்தைக் கொடுக்கின்றன. போராட்டத்தில் கொலைகள் சகஜம் என்ற கணக்கினுள்இந்தக் கொலைகளைக் கணிக்க அவர்கள் மறுக்கின்றனர்.இயக்கங்களின் ஐக்கியமின்மையை இக்கொலைகளின் பின்னனியாக மக்களில் 100க்குத் 90 வீதமானோர் கருதுகின்றனர்.

ஐக்கியப்பட்டால்தான் ஈழம் சாத்தியமாகும் என்பதில் மக்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இயக்கங்கள் ஐக்கியப்படவில்லையே, இயக்கங்கள் நாளுக்கு நாள் பிளவுண்டு கொண்டு செல்கின்றனவே என்று மனம் குமுறும் மக்கள்ஏன் இந்த ஐக்கியம் இல்லாது போனது?ஐக்கியத்தைக் கொண்டு வருவதில் உள்ள இடையூறுகள் என்ன? என்பனபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் இருக்கும் ஒரு தன்மை தென்படுகின்றது.இந்தத் தன்மை ஏதோ ஒரு வகையில் ஐக்கியமின்மைக்கு மறைமுகமாக ஊக்கம் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. ஐக்கியமின்மையின் சரியான காரணங்களைப் பற்றியவிழிப்பு மக்கள் மத்தியில் முதலில் எழ வேண்டும்.

www.tamilarangam.net



இயக்கங்களின் ஐக்கியத்தைப் பற்றிய ஆய்வில் மக்களின் ஐக்கியம் பற்றிய ஆய்வும் அடங்குகின்றது. இயக்கங்களிடையே இருக்கும் பிரிவின் அளவுக்கு மக்களிடையே பிரிவு இல்லையென்று சொல்லலாம். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன ஈழம் கிடைத்தால் போதும், சிறிலங்கா இராணுவம் செத்தால் போதும் என்ற போக்கில் தான்மக்கள் கடந்த காலங்களில் இருந்தனர். ஆனால், போராட்டநகர்வில் ஏற்பட்ட விபரீதமான மாற்றம் மக்களின் சிந்தனைப் போக்கில் ஒரு அதிர்ச்சியைக் கொண்டு வந்திருக்கின்றது. இந்த அதிர்ச்சி மக்கள் விழிக்கத் தொடங்கிவிட்டார்கள்என்பதைப் புலப்படுத்துகின்றது.

கூர்மையடைந்து வரும் பிரச்சனைகள் மக்களை விழிக்கப்பண்ணினாலும் கூட, அந்த விழிப்பு ஐக்கியம் சம்பந்தமான ஒரு தெளிவான படத்தை அவர்கள் முன்கொண்டுவரவில்லை. ஐக்கியத்தின் அவசியத்தையும், அடக்கத்தையும்தெரிந்து வைத்திருக்கும் அவர்கள், ஐக்கியத்துக்கு ஆதரவான சக்திகள்எவை? ஆதரவற்ற சக்திகள் எவை? என்பதைப் புரிந்து கொள்ளமுடியாதவர்களாகவே இன்றுவரை இருந்து வந்திருக்கின்றனர். — இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் மக்கள் அரசியல்மயபடுத்தப்படாமையே யாகும். ஒன்றுக்குப்பின்னாக இயக்கங்கள் தோன்றின. எல்லோருமே தம்மைப் போராளிகள் என்று சொல்லிக்கொண்டார்கள், அத்துடன் "தனிநாடு" என்ற கோரிக்கை அவர்களின் சுலோகமாக இருந்தது. அனைத்து இயக்கங்களிலும் தமிழ் பேசும் போராளிகளே இருந்தனர். எனவே, இயக்கங்கள் எல்லாம் ஒன்று என மேலோட்டமாக முடிவெடுத்துக்கொண்டார்கள். இயக்கங்கள் கொள்கைகளின் அடிப்படையில் பிரிந்து கிடந்ததை அவர்கள் முதலில்கவ

www.tamilarangam.net



ளிக்கத் தவறினர். கண் மூடித்தனமாக தங்கள் விசுவாசத்தை தீய சக்திகளிடம் பலியாக்கிறார்கள்.

இயக்கங்களின் நடவடிக்கைகளில் இருந்த சாதகங்களை போற்றிப் புகழ்ந்த மக்கள் குறைகளைத் தட்டிக் கேட்காமல் இருந்த ஒரு தன்மையையும் கடந்த தசாப்தங்களாக நாங்கள் கண்டுவந்திருக்கின்றோம். ஆனால், இன்று இந்த நிலைமையில் மாற்றம் வந்திருக்கின்றது. குறிப்பிட்ட சில இயக்கங்களின் அராஜகத்துக்கு எதிராக மக்கள் தமது அதிருப்தியைக் காட்டத் தொடங்கியிருக்கின்றார்கள் எனினும், காலம் கடந்த வெளிப்பாடுகள் பல நெருக்கடிகளைத் தொட்டு நிற்கின்றன. அராஜகத்தை நேரடியாகஎதிர்த்த மக்களின் பலர் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். அராஜகவாதிகளின் முகாம்களிற்குள் சித்திரவதைக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றனர்.

ஐக்கியம் எமக்கு அவசியம். ஐக்கியம் என்ற நிலையைத் தொடுவதன் மூலமே ஈழப்போராட்டத்தைச் சாத்தியமாக்க முடியும். ஐக்கியமின்மை போராட்டத்தைப் பலவீனப்படுத்தி எதிரியின் கரத்தைப் பலப்படுத்தக்கூடிய ஒன்றாகும். இவை மிகவும் சாதாரணமான உண்மைகள். இந்த உண்மைகளை விளங்கிக் கொள்ளாமலேயே இருப்போம் என்றுமுரண்டு பட்டுக்கொண்டிருக்கும் அராஜக சக்திகள் தம்மை இன்று இனம் காட்டியிருக்கின்றன. மக்களைப் பொறுத்தவரையில் இன்று அராஜகத்தின் முகங்களைத் தெரிந்து கொண்டவர்களாக உள்ளனர்.

எனினும் அடுத்த நடவடிக்கை என்ன என்பதில் அவர்களுக்கு தெளிவு உண்டா என்பது கேள்விக்குரிய விடயமே. ஐக்

www.tamilarangam.net


சியத்தில் அவசியத்தை வலியுறுத்துகின்றார்கள். அதற்கு எதிரான சக்திகளையும் இனம் கண்டுள்ளார்கள். ஆயினும், அடுத்த நடவடிக்கையை எடுக்கத் தாமதிக்கின்றார்கள். என்றால், அவர்கள் எதற்கோ அஞ்சுகின்றார்கள் என்றே அர்த்தம்.

அதாவது எதிரியை நோக்கி நீட்டப்பட்ட ஆயுதமுனைகள் இன்று மக்களையும் நோக்கி நீட்டப்படுகின்றன. மக்களுக்கு எதிரான ஆயுதங்களைத் திருப்பிய சக்திகள் ஐக்கியத்தைக் கெடுக்கும் சக்திகளாகும். இந்த சக்திகளை நிராகரித்து புரட்சிகர சக்திகளை மக்கள் ஆதரிக்கும் நிலை பூரணமாகும்போதே சரியான ஐக்கியம் தோன்றும். புரட்சிகர சக்திகளை ஆதரிக்கும் வேளைகளில் கூட அந்த சக்திகளைப் பற்றிய தெளிவான அறிவினை மக்கள்முதலில்பெற வேண்டும். விசாரணைகள் அற்ற கண்மூடித்தனமான ஆதரவுகள் தற்காலிகமானவையாகிவிடும்.

மக்கள், போராட்டத்தில் பார்வையாளர்களாக இருந்த தன்மையும் இங்கு அவதானிக்க வேண்டிய ஒன்றாகும். " எங்களுக்குள் ஐக்கியமில்லையே, இயக்கங்கள் பிரிபட்டுக்கிடக்கின்றனவே " என்ற அவர்களின் மன உழைச்சலுக்குக் காரணம் அவர்கள் பார்வையாளர்களாக இருந்ததுமாகும். ஆனால், பங்காளிகளாக மாறும்போது ஐக்கியம் வலுவடையவும், போர் இயக்கம் புதிய சக்தியைப் பெறவும் வாய்ப்புண்டு.

ஐக்கியத்தை உருவாக்குவதற்கான காலம் செத்துவிடவில்லை. ஐக்கியத்தைக் கொண்டு ஈழத்தை எப்படியாவதுஉரு

www.tamilarangam.net



வாக்கியே தீருவோம் என்பதில் உறுதியாக நிற்கும் புரட்சிகர சக்திகளுடன் மக்களும் ஐக்கியமாக வேண்டும். இது வே எமது இன்றைய மிகவும் அத்தியாவசியமான தேவை-யாகும்.

T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T T



www.tamilarangam.net

# நகரம் எமது கட்டுப்பாட்டுக்குள்

காலம்
முன்னோக்கித்தான் நகருமாம்;
அறிவு
அனுபவம்........
புரியவில்லை!

இயற்கை விதி
எப்போது மாறியது?
ஆயிரம் வருடங்கள்
பல்லாயிரம் வருடங்கள்
பின்னோக்கி; பின்னோக்கி.......

புத்தகங்கள்
தத்துவங்கள்
எல்லாம் எல்லாம்
ஒரே குளறுபடி
பொய் சொல்லுகின்றன
இம் என்றால் வனவாசம்
ஏன் என்றால் சிறைவாசம்
இதிகாச காலமும் மாறி.

அதற்கும் முன்
ஏன் என்றாலும்
எதற்கு என்றாலும்
மரண வாசம்;
வீதிகள் வெறிச்சோடி
வெள்ளிகள் ஒளி இழந்து
நிலவும் இடம் மாறி........

எதிரிகளாலும்
அறுக்கப்படாமல் இருந்து
நம்பிகளினால்
தட்டிப் பறிக்கப்பட்ட
தாலிகள்
பொட்டிழந்த
முகங்களைப் பார்த்து
புன்முறுவல் செய்ய;

மூத்தவனை இளையவனும்
இளையவனை மூத்தவனும்
கொன்று போட;
பெத்தவள்
நீறு பூக்காத நெருப்பை
நெஞ்சினுள் சுமக்க
இருள் கருக்கட்டிய
வானத்தில்
கழுகுகள் வட்டமிட

பிணங்கள்...... ஓலங்கள்......
"பேயரசு செய்தால்".....
நினைவுக்கு வரும் வாக்கியங்கள்
எல்லாவற்றிற்கும் மேலாக
முழக்கமிடும்
சில குரல்கள்
சந்தமாய்
பெருஞ் சத்தமாய்
"நகரம் எமது கட்டுப்பாட்டிற்குள்"..

— அருந்ததி



www.tamilarangam.net



வெளியீடு: ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
பிரான்சு பிரிவு.